சுற்றறிக்கை–3

www.Padasalai.Net

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை–6
ந.க.எண். 26366 / சி3 / இ1 / 2024 நாள். 22.06.2024

பொருள்: பள்ளிக் கல்வி – 2024–25ல் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – திருத்திய காலஅட்டவணை வெளியிடுதல் – சார்பு.

பார்வை: 1 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.17929/அ1/இ4/2023 நாள்.6.5.2024

2 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.26366 / சி3 / இ1 / 2024 நாள்.10.5.2024 மற்றும் 15.5.2024

–0–

தொடக்கக் கல்வித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களுக்கான 2024–25ம் கல்வியாண்டிற்கு பொதுமாறுதல் கலந்தாய்வு மே–2024 மாதம் தொடங்கி, நடத்திட அரசளவில் ஆணை பெறப்பட்டு, கலந்தாய்விற்கான உத்தேச காலஅட்டவணை பார்வை–1ல் காணும் செயல்முறைகளின் மூலம் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் 2024–25ம் கல்வியாண்டில் நடைபெறவுள்ள பொதுமாறுதல் கலந்தாய்விற்கு, முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு ஆர்வத்துடன் ஆசிரியர்கள் மாறுதல் கோரி விண்ணப்பித்து வருவதால் பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து மாறுதலுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசத்தை நீட்டிக்குமாறு வரப்பெற்ற கோரிக்கையினை ஏற்று, பொதுமாறுதல் கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்கும் காலஅளவை 25.05.2024 வரை நீட்டித்து செய்தி வெளியிடப்பட்டது.

மேலும் கலந்தாய்வு நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தற்போது பொது மாறுதல் கலந்தாய்விற்கான திருத்திய காலஅட்டவணை பதவி வாரியாக இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.

இணைப்பு: திருத்திய காலஅட்டவணை

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
(மின்னஞ்சல் மூலமாக)

பள்ளிக் கல்வித்துறை www.Padasalai.Net

2024-25ம் கல்வியாண்டிற்கு பொது மாறுதல் கலந்தாய்வு

உத்தேச கலந்தாய்வு கால அட்டவணை (பள்ளிக் கல்வி)

கலந்தாய்வு நடைபெறும் நேரம் : முற்பகல் 09.30 முதல் பிற்பகல் 06.00 வரை

| வ. எண் | இயக்ககம் | பதவி | தற்போது திருத்திய கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 1 | DSE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்களின் முன்னுரிமைப் பட்டியல் (Seniority List) வெளியிடுதல் | 03.07.2024<br>10.00 AM<br>புதன் |
| 2 | DSE | முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் (Claims and objections) | 04.07.2024 முதல்<br>05.07.2024 முடிய<br>05.00PM |
| 3 | DSE | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Release off seniority list ) | 06.07.2024<br>சனி |
| 4 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு பட்டதாரி ஆசிரியர்கள் (IEDSS) மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 08.07.2024<br>திங்கள் |
| 5 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு பட்டதாரி ஆசிரியர்கள் (IEDSS) மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 09.07.2024<br>செவ்வாய் |
| 6 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 10.07.2024<br>புதன் |
| 7 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 11.07.2024 முதல்<br>20.07.2024 முடிய |
| 8 | | Moharam Govt. Holiday | 17.07.2024 |
| 9 | DSE | அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 22.07.2024<br>திங்கள் |
| 10 | DSE | அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 23.07.2024<br>செவ்வாய் |

| வ. எண் | இயக்ககம் | பதவி | தற்போது திருத்திய கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 11 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 24.07.2024 புதன் |
| 12 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 25.07.2024 வியாழன் |
| 13 | DSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 26.07.2024 வெள்ளி |
| 14 | DSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை–1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 27.07.2024 முதல் 31.07.2024 முடிய |

21/06/24

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

22/6/24